## கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம் - 2014

கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைசாத்திட்ட 2009 திசெம்பர் 18 ஆம் திகதிய 2557 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 5 ஆம் பட்டியலின் 27 ஆம் பிரிவு மற்றும் 2558 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 5 ஆம் பட்டியலின் 27 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன அமுலாக்கல் முகவர்களாக உள்ளதுடன் முன்னாள் உள்ளுராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சும் தற்போதைய மாகாணசபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளது. முன்னேற்றப்பட்ட கடல்சார் மற்றும் உள்நாட்டின் தண்ணீர் தரம் மற்றும் அதன்விளைவான உடல்நல மற்றும் சுகாதார நிலைமை முன்னேற்றம் என்பவற்றின் ஊடாக கொழும்பு பெரும்பாகத்திலுள்ள நகர மற்றும் புறநகர் பகுதிகளில் 1.5 மில்லியன் வதிவிடத்தினருக்காக நகர சுற்றாடல் மற்றும் பொது சுகாதாரம் என்பவற்றினை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின் படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,003.53 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 109.12 மில்லியனானதுடன் அதில் ரூபா 10,380.70 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 94.37 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 ஏப்ரல் 09 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2014 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2017 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. .

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் எஸ்எம்ஈஎஸ் இற்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.3. கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப் பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் எஸ்எம்ஈஎஸ் இற்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை எஸ்எம்ஈஎஸ் இற்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஒப்பந்தகாரர் ஊடாக ரூபா 13,057,000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 02 மோட்டார் வாகனங்கள் மோட்டார் வாகனங்களிற்கு பதிலாக சிவில் வேலைகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் 8.1 ஆம் பந்தியின் பிரகாரம், செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் குறுகிய கால பயிற்சி பாடநெறிக்கு மாத்திரம் செயற்திட்டத்தின் நிதி உதவி பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், கொழும்பு மா நகர சபையின் 02 உத்தியோகத்தர்களின் பட்டப் பின்படிப்பிற்காக செயற்திட்டத்தால் ரூபா 191,000 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஏடிபீ | 94.37 | 10,380.70 | 1,479.00 | 11.45 | 1,488 | 20.64 | 2,683.67 |
| இலங்கை அரசாங்கம் | 14.75 | 1,622.83 | 230.00 | 1.77 | 230 | - | 420.73 |
| **மொத்தம்** | **109.12** | **12,003.53** | **1,709.00** | **13.22** | **1,718** | **20.64** | **3,104.40** |

செயற்திட்டத்தின் முழுக் காலத்திற்காகவும் ஒட்டுமொத்த செயற்திட்ட திட்டம் 2009 முதல் 2014 வரையான காலத்திற்காக செயற்திட்டத்தின் தொடக்கத்தில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அக்காலப்பகுதிக்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன குறித்த செயற்திட்ட காலப்பகுதிக்குள் சிக்கனமான மற்றும் வினைத்திறனான வழிகளில் முன்னர் நிர்ணயிக்கப்பட்ட பௌதீக மற்றும் நிதி இலக்குகளின் அடைதலை உறுதிப்படுத்துவதற்கு தயாரித்து அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. 30 மாதங்கள் நீடிக்கப்பட்ட காலத்திற்குள் ஒதுக்கப்பட்ட நிதிகளில் 19 சதவீதம் மாத்திரம் செயற்திட்டத்தின் 57 மாதங்களிற்குள் பயன்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மிகுதி ஐ.அ.டொலர் 88.48 மில்லியன் தொகையின் பயன்படுத்தலின் சாத்தியம் ஐயத்திற்கிடமாக உள்ளது.

## 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டமானது நீரிறைக்கும் இயந்திரங்கள், சாக்கடை குழாய்கள் மற்றும் வடிகால் வெளியேற்றங்கள் கழிவகற்றல் உட்கட்டமைப்பு தரமுயர்த்தல், சொத்து முகாமைத்துவத்தில் நிறுவனரீதியான மற்றும் செயற்பாட்டு இயலளவை வலுப்படுத்தல், நிதி முன்னேற்றம், செயற்பாட்டு செயலாற்றல் கண்காணிப்பு, சுற்றாடல் பிரமாண இணக்கம், வாடிக்கையாளர் சேவைகள் மற்றும் கொழும்பு பெரும்பாக பகுதியில் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் அமுலாக்கம் போன்றவற்றிற்காக 28 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டதுடன் 2017 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தகைய வேலைகளின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 48 சதவீதத்தில் இருந்தது.

(ஆ) 2014 சனவரி 13 இல் வழங்கப்பட்டிருந்த வண்ணாத்திமுல்லை புவியீர்ப்பு மைய வலையமைப்பின் நிர்மாணம் மற்றும் தரமுயர்த்தலில் 2015 பெப்ரவரி 19 இல் செய்யப்பட்ட பௌதீக பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிர்மாண வேலைகள் 2015 சனவரி 27 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவற்றின் மீதான பௌதீக முன்னேற்றம் 2015 பெப்ரவரி 15 இல் 13 சதவீதத்தில் இருந்தது. முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், ஒப்பந்தங்களிற்காக வழங்கப்பட்ட நிதி வளங்கள் போதாமை காரணமாக தொடர்ச்சியாக நிர்மாண வேலைகளை செயற்படுத்துவதற்கு ஒப்பந்தகாரரால் இயலாதிருந்தது.

(ii) 08 நீர்த் தரைகள் மற்றும் வடிகாலமைப்பு முறைமை அரைவாசி பூர்த்தியாக்கப்பட்டதுடன் வெள்ளப்பாதிப்பு, நுளம்பு பெருக்கம் போன்ற அனுமதிக்கின்ற சுற்றாடல் இடையூறுகள் 02 மாதங்களிற்கு மேலாக சரி செய்யப்பட்டிருக்கவில்லை என பௌதீக பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.